# செய்தி வெளியீடு

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்: 2022 - முதலாம் காலாண்டு

**2022 முதலாம் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 1.6 சதவீதத்தால் சுருங்கியுள்ளது**


**தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

தொ.பே:94-11-2147071 தொ.நகல்:94-11-2877938 மின்னஞ்சல்:national.accounts@statistics.gov.lk


இலங்கையின், 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (ஜனவரி 1 முதல் மார்ச் 31 வரை) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2015) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் (GDP), அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால்(DCS) வெளியிடப்படுகிறது.

தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் மறை 1.6 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது, 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டின் மதிப்பு GDP உடன் ஒப்பிடப்படும்போது பொருளாதாரத்தின் கணிசமான சுருக்கத்தை இது சுட்டிக்காட்டுகிறது.

2022 ஆம் ஆண்டின் விடியலில், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட்-19 தொற்றுநோயின் கடினமான காலத்திற்குப் பிறகு, பொருளாதார மீட்சிக்கான புதிய எதிர்பார்ப்புகளுடன் இலங்கைப் பொருளாதாரம் மெதுவாக மேம்படத் தொடங்கியது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, 2022 இன் முதலாம் காலாண்டிற்குள், பணவீக்கம், அந்நியச் செலாவணி மதிப்பிழப்பு, டொலர் பற்றாக்குறை, போன்ற மேற்கூறிய பாதகமான காரணிகளால் 2021 முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்து செல்வதாக அறிவிக்கப்பட்டது.

இந்த காலகட்டத்தில் இரசாயன உரங்களின் பற்றாக்குறை விவசாய உற்பத்திகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது மற்றும் குறிப்பாக நாட்டின் பிரதான உணவுப் பயிரான அரிசி உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளது. ஆக, விவசாயப் பொருளாதாரம் 2015 ஆம் ஆண்டிலிருந்து முதல் காலாண்டுத் தொடரில் மிக அதிகமான சரிவை பதிவு செய்தது. மேலும், பல கைத் தொழில்கள் மற்றும் சேவைகளுக்கு அத்தியாவசியமான எரிபொருள் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் கட்டுமானத் தொழில் உட்பட அனைத்து உற்பத்தித் தொழில்களிலும் உற்பத்தியைக் குறைத்துள்ளன. அதன்படி, 2022 இன் முதலாம் காலாண்டில் கைத்தொழில் துறையும் குறிப்பிடத்தக்க சரிவை பதிவு செய்துள்ளது. இருப்பினும், நாட்டில் நிலவும் அனைத்து பாதகமான சூழ்நிலைகளையும் மீறி, 2021 இன் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2022 முதலாம் காலாண்டில் சேவை நடவடிக்கைகள் லேசான அதிகரிப்பை பதிவு செய்துள்ளன. .

2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான (2015) விலையில் ரூ. 3,463,101 மில்லியனாகவும், 2021 இன் முதலாம் காலாண்டில் ரூ. 3,519,921 மில்லியனாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது, இது 2021 முதலாம் காலாண்டில் பதிவான 4.0 நேர் சதவீதத்திற்கு எதிராக 2022 முதலாம் காலாண்டில் GDP வளர்ச்சி வீதத்தில் 1.6 சதவீதம் சரிவை பதிவு செய்தது.

மேலும், 2022 முதலாம் காலாண்டிற்கான நடைமுறை விலையில் GDP ரூ. 5,368,465 மில்லியனில் இருந்து ரூ. 4,573,080 மில்லியன் 17.4 சதவீத நேர் மாற்றத்தை பதிவு செய்தது.

பொருளாதாரத்தின் மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகள்; 'விவசாயம்', 'கைத்தொழில்' மற்றும் 'சேவைகள்' ஆகியவை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடைமுறை விலையில் முறையே 8.1 சதவீதம், 31.1 சதவீதம் மற்றும் 55.6 சதவீதம் பங்களித்துள்ளன, அதே சமயம் 2022 முதலாம் காலாண்டில் 'பொருட்கள் மீதான வரிகள் குறைவான மானியங்கள்' என்ற கூறு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5.2 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது.

இதற்கிடையில், 2022 இன் முதலாம் காலாண்டில், விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகள் முறையே 6.8 சதவீதம் மற்றும் 4.7 சதவீதம் சுருக்கங்களை பதிவு செய்தன. 2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டின் இந்த மதிப்புகளுடன் ஒப்பிடும் போது, சேவைத் துறையானது 0.7 சதவீத அற்பமான விரிவாக்கத்தைப் பதிவு செய்துள்ளது.

## விவசாய துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், 2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவான 6.4 சதவீத நேர் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, ஒட்டுமொத்த விவசாயத் துறையில் விவசாய நடவடிக்கைகள் 6.8 சதவீத கணிசமான சுருக்கத்தை பதிவு செய்துள்ளன. உரங்களின் பற்றாக்குறை மற்றும் பிற காரணிகள் இந்த பருவத்தில் கடுமையாகப் பாதித்ததால் பெரும்பாலான விவசாய நடவடிக்கைகளில் விளைச்சல் குறைந்துள்ளது. விவசாய நடவடிக்கைகளில் இந்த சுருக்கம் முக்கியமாக பின்வரும் மறை வளர்ச்சி வீதங்களால் உந்தப்பட்டது, 'நெல் வளர்ச்சி' (33.8 சதவீதம்), 'தேயிலை வளர்ச்சி' (பச்சை இலைகள்)' (15.0 சதவீதம்), 'இறப்பர் வளர்ச்சி' (13.1 சதவீதம்), தானியங்களின் 'வளர்ச்சி' (அரிசி தவிர)' (9.4 சதவீதம்), 'காய்கறிகள் வளர்ச்சி' (8.4 சதவீதம்) மற்றும் 'பழங்களின் வளர்ச்சி' (3.8 சதவீதம்).

எவ்வாறாயினும், 'தாவரப் பெருக்கம்' (30.3 சதவீதம்) மற்றும் 'எண்ணெய் சார்ந்த பழங்களின் வளர்ச்சி: தேங்காய் உள்ளடங்கலாக'' (16.7 சதவீதம்) போன்ற நடவடிக்கைகள் முறையே 2021 இன் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும்போது 2022 இன் முதலாம் காலாண்டில் கணிசமான நேர் விரிவாக்கங்களைப் பதிவு செய்துள்ளன. மேலும், 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'விலங்கு உற்பத்தி'யின் செயல்பாடு ஒரு சிறிய விரிவாக்கத்தை அறிவித்தது, அதே நேரம் 'கடல் மீன்பிடித்தல் மற்றும் கடல் மீன் வளர்ப்பு' மற்றும் 'நன்னீர் மீன்பிடித்தல் மற்றும் நன்னீர் மீன் வளர்ப்பு' உள்ளிட்ட அனைத்து மீன்பிடி நடவடிக்கைகளும் முறையே 0.5 சதவீதம் மற்றும் 9.3 சதவீதம் மறையான வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

## கைத்தொழில் துறையின் செயற்பாடு

2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பதிவான 6.0 விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் இந்த காலாண்டில் ஒட்டுமொத்த கைத்தொழில்துறை செயல்பாடுகள் கணிசமான அளவில் 4.7 சதவீத சுருக்கத்தை பதிவாகியுள்ளன. 'உற்பத்தி மற்றும் 'கட்டுமான' செயல்பாடுகளின் மந்தநிலை இந்த சுருக்கத்திற்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2021 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ஒட்டுமொத்த உற்பத்தித் துறை 6.9 சதவீதச் சுருக்கத்தைக் குறிக்கிறது. இந்த காலகட்டத்தில் அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் கணிசமான மறை வளர்ச்சியை பதிவு செய்துள்ளன. இந்த காலாண்டில், 'கரி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள் உற்பத்தி' 24.3 சதவீத அதிகபட்ச சுருக்கத்தை பதிவு செய்துள்ளது. உற்பத்தித் துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்களிப்பாளர்களான 'உணவு, பானங்கள் மற்றும் புகையிலை பொருட்கள் உற்பத்தி' மற்றும் புடவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு’ ஆகியவையும் இந்த காலாண்டில் முறையே 9.1 சதவீதம் மற்றும் 0.9 சதவீதம் சுருக்கங்கள் பதிவாகியுள்ளன. இந்த காலகட்டத்தில் 'இரசாயன பொருட்கள் மற்றும் அடிப்படை மருந்து பொருட்களின் உற்பத்தி' (16.0 சதவீதம்), 'தளபாடங்கள் உற்பத்தி' (13.0 சதவீதம்) மற்றும் 'அடிப்படை உலோகங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட உலோக பொருட்கள் உற்பத்தி’ (10.4 சதவீதம்) குறிப்பிடத்தக்க சுருக்கங்களை பதிவு செய்துள்ளன.

மேலும், 'காகித பொருட்கள் உற்பத்தி, அச்சுப் பதிப்பு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஊடகத்தின் மீள் தயாரிப்பு ’(8.8 சதவீதம்), ’இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி’ (7.0 சதவீதம்) மற்றும் ' பிற உற்பத்தி, மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்தல் மற்றும் நிறுவுதல்' (6.5 சதவீதம்) ‘புடவை உற்பத்தி, ஆடை மற்றும் தோல் தொடர்பான தயாரிப்பு’ (0.9 சதவீதம்), ஆகியவையும் முந்தைய ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த காலகட்டத்தில் கணிசமான மறை வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்துள்ளன.

'கைத்தொழில்துறை நடவடிக்கைகளில்', 'கட்டுமான' செயல்பாடு, கைத்தொழில் துறையில் கிட்டத்தட்ட 9.3 சதவீத பங்கைக் கொண்டுள்ளது, 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 2.2 சதவீத மறை வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. மேலும், இந்த காலகட்டத்தில் ‘சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்’ செயல்பாடு 1.5 சதவீத மறை வளர்ச்சி வீதத்தையும் பதிவு செய்தது. இதற்கிடையில், 'மின்சாரம், எரிவாயு, நீராவி மற்றும் குளிரூட்டி வழங்கல்' செயல்பாடு 3.7 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்துள்ளது.

## சேவைத் துறையின் செயற்பாடு

2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில், சேவைத் துறையின் செயல்திறன் ஒட்டுமொத்த சேவைகள் தொடர்பான செயல்பாடுகளில் சிறிதளவு வளர்ச்சி 0.7 சதவீதத்தைப் பதிவு செய்துள்ளது. சேவைத் துறையின் விரிவாக்கம் குறிப்பாக 'தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள் சேவை நடவடிக்கைகள்' (25.2 சதவீதம்), 'தகவல் தொழில்நுட்ப நிரலாக்க ஆலோசனை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள்' (12.3 சதவீதம்), 'தொலைத்தொடர்பு' (7.9 சதவீதம்), பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு; கட்டாய சமூகப் பாதுகாப்பு' (3.4 சதவீதம்), ’வதிவிடச் சொத்துடமை உள்ளிட்ட உண்மைச் சொத்து நடவடிக்கைகள்’ (3.9 சதவீதம்), 'அஞ்சல் மற்றும் கூரியர் நடவடிக்கைகள்' (3.3 சதவீதம்),

'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' (1.0 சதவீதம்) மற்றும் 'கல்வி' (0.6 சதவீதம்) ஆகிய துணை நடவடிக்கைகளால் அடிகோலப்பட்டுள்ளது.

மேலும், 2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் மற்ற சேவைகள் தொடர்பான அனைத்து துணை செயல்பாடுகளும் அவற்றின் ஒட்டுமொத்த செயல்திறனில் சுருக்கங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில், 'நிகழ்ச்சிகள் மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகள் மற்றும் ஆடியோ வீடியோ தயாரிப்புகள்' (8.7 சதவீதம்), 'தொழில்முறை சேவைகள்' (5.5 சதவீதம்', 'காப்புறுதி நடவடிக்கை' (4.4 சதவீதம்), 'பிற தனிநபர் சேவை நடவடிக்கைகள்' (4.0 சதவீதம்) 'பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளிட்டவை (1.0 சதவீதம்) ஆகியவை முந்தைய ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த காலாண்டில் கணிசமான மறை வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளன.

2022 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலும் விரிவான விபரங்கள் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (www.statistics.gov.lk/NationalAccounts/StatisticalInformation/GDP) வெளியிடப்பட்டுள்ளன.

பி. எம். பி அனுர குமார

**பணிப்பாளர் நாயகம்**